தரம் 10

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## வாக்கியங்கள்

அலகு 1
தமிழ் எழுத்துக்கள்

MR.J.HARIHARAN (BEd),
K/WESTHALL TAMIL VIDYALAYAM (NATIONAL SCHOOL).

## உள்ளடக்கம்....


- வாக்கியங்கள் சில..
- வாக்கியம் பற்றிய வரைவிலக்கணம்
- வாக்கியங்கள் சில..
- வாக்கிய வகைகள் பற்றிய எண்ணக்கரு படவிளக்கம்
- தனிவாக்கியம் மற்றும் உதாரணங்கள்
- கூட்டு வாக்கியங்கள் மற்றும் உதாரணங்கள்
- கலப்பு வாக்கியம் மற்றும் உதாரணங்கள்
- பயிற்சி 1
- பயிற்சி 2
- பயிற்சி 3
- பயிற்சி 4

# “தமிழால் வாழ்வோம்”

மாணவர்களே! நாம் சில தொடர்களை அவதானிப்போம்.

01
பாரதியாரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை.

02
பாரி மன்னன் பறம்பு மலையை ஆண்டான்.

03
சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர் சங்கங்கள் சென்று பாக்களை அரங்கேற்றினர்.

04
உமறுப்புலவர் சொற்சுவை மிகுந்த முதமொழி மாலையை இயற்றினார்.

## வாக்கியம்

01

சொற்கள் தனித்து நின்று அல்லது தொடர்ந்து வந்து கருத்தைத் தந்து முற்றுப் பெற்று வருமாயின் அதனை நாம் வாக்கியம் என்போம்.

02

இதனை இன்னொரு முறையிலும் கூறலாம். அதாவது கருத்து முழுமைப் பெற்றத் தொடர்கள் முற்றுத்தொடர்கள், இவையே வாக்கியம் என அழைக்கப்படும்.

03

கருத்து முழுமை பெறாதவை தொடர்கள் எனப்படும்.

04


ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள், அடை, இணைப்பிடைச்சொற்கள் ஆகிய கூறுகள் சிலவோ பலவோ இடம்பெறும்.

# “தமிழால் வாழ்வோம்”

மாணவர்களே! மேலே பார்த்த முற்றுத்தொடர்களுள் சொற்கள் தனித்தும் தொடர்ந்தும் வந்து கருத்துக்களை தருவதனையே நாம் அவதானிக்கின்றோம். ஆகவே இவ்வாறு அமையப் பெறுபவைகளை வாக்கியம் என்போம்.

- பாரதியாரின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை.
- பாரி மன்னன் பறம்பு மலையை ஆண்டான்.
- சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் சங்கங்கள் சென்று பாக்களை அரங்கேற்றினர் என்று சங்க நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது.
- உமறுப்புலவர் சொற்சுவை மிகுந்த முதுமொழிமாலையை இயற்றியருளினார்.

அந்தவகையில் வாக்கியம், அமைப்பின் அடிப்படையில் மூன்று வகைப்படும்.



## தனி வாக்கியம்

ஓர் எழுவாயையும் அதனது ஒரு செயலையும் கூறி முற்றுப்பெறுவது தனிவாக்கியம் எனப்படும். இதில் ஓர் எழுவாய் அல்லது பல எழுவாய்கள் வந்து ஒரு பயனிலையைக் கொண்டமைவது எனவும் தனிவாக்கியத்தைக் குறிப்பிடலாம்.

உதாரணம்:

ராமு பாடினான். (ராமு ஒரு எழுவாய், பாடினான் என்பது பயனிலை

ராமுவும் கந்தனும் பாட்டுப் பாடினர். ( ராமு, கந்தன் என்பன எழுவாய். பாடினர் என்பது பயனிலை.

## கூட்டு வாக்கியம்

சமனிலைத்தொடர்களால் இணைக்கப்படுவது கூட்டுவாக்கியம் எனப்படும். அதேவேளை ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளைப் பெற்று வருவது எனவும் குறிப்பிடலாம்.

உதாரணம்:
குமரன் நன்றாகப் படித்தான்.
குமரன் பரீட்சையில் சிறப்பான புள்ளிகளைப் பெற்றான்.

இவ்விரு வாக்கியங்களிலும் குமரன் என்பது எழுவாய். இதில் படித்தான், பெற்றான் என்பன பயனிலைகள்.

இதனை,
குமரன் நன்றாகப் படித்து, பரீட்சையில் சிறப்பான புள்ளிகளைப் பெற்றான். என வாக்கியத்தை நிறைவு செய்யலாம். இதில் இரு சமனிலைத்தொடர்கள் காணப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் ஒரு உதாரணத்தை நாம் நோக்கலாம்.

குமரனும் முருகனும் நன்றாகப் படித்தார்கள்.
பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றார்கள்.

இவ்விரு வாக்கியங்களிலும் குமரனும் முருகனும் என்பது எழுவாய். இதில் படித்தார்கள், பெற்றார்கள் என்பன பயனிலைகள்.

இதனை,
குமரனும் முருகனும் நன்றாகப் படித்து, பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றார்கள். என வாக்கியத்தை நிறைவு செய்யலாம்.

## கலப்பு வாக்கியம்

ஒரு தலைமைத்தொடரையும் ஒன்றோ பலவோவான சார்புத் தொடர்களையும் கொண்டமையும் வாக்கியங்கள் கலப்பு வாக்கியம் என அழைக்கப்படும். அதனை பின்வருமாறும் குறிப்பிட இயலும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட தகவல்களை அல்லது செய்திகளை ஒரே வாக்கியத்தில் கொண்டிருப்பது எனவும் குறிப்பிட முடியும்.

இதில் ஒரு தலைமைத்தொடர் அல்லது முதன்மைத்தொடரையும் அதனைச் சார்ந்து ஒன்றுக்கு மேற்பட்ட சார்புத்தொடர்கள் கலந்து வருவது இக்கலப்பு வாக்கியமாகும்.

அது மாத்திரமன்றி சில வேளைகளில் கலப்பு வாக்கியங்களில் என, என்னும், என்றும், ஆல், ஓ போன்ற இணைப்புச் சொற்கள் கூட தேவைக்கேற்ப இடம்பெறுவதனை நாம் வாக்கியங்களில் அவதானிக்கலாம்.

உதாரணம்:

தலை வலித்ததால் முருகு இன்று பாடசாலைக்கு வரவில்லை.

இதில்,
முருகு இன்று பாடசாலைக்கு வரவில்லை - தலைமைததொடர்.
தலை வலி - சார்புத்தொடர்
ஆல் - இணைப்புச்சொல் அல்லது நிரப்பித்தொடர்

பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறவேண்டும் என்றால் மாணவர்கள் முயற்சித்துக் கற்றல் வேண்டும்.

இதில்,
பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெறவேண்டும் - தலைமைத்தொடர்
மாணவர்கள் முயற்சித்துக் கற்றல் வேண்டும் - சார்புத்தொடர்
என்றால் - இணைப்புச்சொல் அல்லது நிரப்பித்தொடர்.

மேலும் சில,

இயேசுபிரான் ‘குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள்’ என்று அறுதியிட்டுக் கூறுகின்றார்.
இயேசுபிரான் அறுதியிட்டுக் கூறுகின்றார் - தலைமைத்தொடர்
குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள் - சார்புத்தொடர்
என்று - இணைப்புச்சொல் அல்லது நிரப்பித்தொடர்.

பாரதிதாசன் ‘ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள்’ என அழகுறக் குறிப்பிடுகின்றார்.
பாரதிதாசன் அழகுறக் குறிப்பிடுகின்றார் - தலைமைத்தொடர்
ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள் - சார்புத்தொடர்
என - இணைப்புச்சொல் அல்லது நிரப்பித்தொடர்.

பயிற்சி : 01

கீழ்க்காணும் வாக்கியங்களின் வகைகளை அடையாளம் காண்க.

1. அமுதனும் குமரனும் கதைப்புத்தகம் வாசித்தார்கள்.
2. கீதாவின் எதிர்கால ஆசை மருத்துவராக வேண்டும் என்பதால் அவள் அதற்கேற்ற துறையைத் தெரிவு செய்து படித்தாள்.
3. அண்ணன் புதிய வீடொன்றினை வாங்கினார்.
4. சாலை விபத்தில் முருகுவின் கால் முறிந்ததால் அவன் மருத்துவரைச் சந்தித்தான்.
5. தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயற்சிக்க வேண்டும்.
6. லீலா கவிதைப் போட்டியில் பங்கெடுத்தாள்.
7. கதைகளில் கதைமாந்தர்கள் அதிகமாக பங்காற்றுகின்றனர்.
8. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டுமென்றால் மாணவர்கள் வகுப்பறைக்கற்றலில் கவனம் செலுத்த வேண்டும்.
9. ரவி ஓட்டப்பந்தயப் போட்டிக்காக நன்றாகப் பயிற்சி எடுத்ததால் போட்டியில் வெற்றி பெற்றான்.
10. மாலா மழையில் நனைந்ததனால் அவளின் அம்மா அவள் மீது கோபம் கொண்டார்.

பயிற்சி : 02

நீர் விரும்பிய தனிவாக்கியங்கள் ஐந்தினை எழுதுக.

1..........................................................................................................................................................................................................

2..........................................................................................................................................................................................................

3..........................................................................................................................................................................................................

4..........................................................................................................................................................................................................

5..........................................................................................................................................................................................................

பயிற்சி : 03

கீழ்வரும் சமனிலைத்தொடர்களை வைத்து, கூட்டுவாக்கியங்களாக்குக.

1. நான் சிவனொளிபாதமலை செல்வேன்.
   நான் சீகிரியா செல்வேன்.

.................................................................................................................................................................................

2. சுமதி என்னுடன் கோவிலுக்கு வருகிறாயா?
   சுமதி என்னுடன் கோவிலுக்கு வரவில்லையா?

.................................................................................................................................................................................

3. இராமன் அயோத்திக்குச் சென்றான்.
   விபீஷணன் இலங்காபுரிக்குச் சென்றான்.

.................................................................................................................................................................................

பயிற்சி : 04

கீழ்வரும் வாக்கியங்களில் காணப்படும் தலைமைத்தொடர், சார்புத்தொடர் மற்றும் நிரப்பித்தொடர்களை வேறாக்கி எழுதுக.

1. மகன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை என்று தாய் கவலைப்பட்டாள்.
   தலைமைத்தொடர்:.....................................................
   சார்புத்தொடர்:.............................................................
   நிரப்பித்தொடர்:...........................................................

2. அம்மா காய்கறிகளை வாங்குவதற்கு சந்தைக்குச் சென்றார்.
   தலைமைத்தொடர்:.....................................................
   சார்புத்தொடர்:.............................................................
   நிரப்பித்தொடர்:..........................................................

3. சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் என பாரதியார் கூறினார்.
   தலைமைத்தொடர்:.....................................................
   சார்புத்தொடர்:.............................................................
   நிரப்பித்தொடர்:...........................................................

மாணவர்களே! உங்களின் மேலதிக சுயமதிப்பீட்டிற்கு கீழுள்ள லிங்கினை அழுத்தி மதிப்பீட்டினை மேற்கொள்ளவும்.

https://docs.google.com/forms/d/1-xjyU1tniqq0g3711LBkR0A1PVPTTVfLxM7eSCIo2HA/edit

# நன்றி